# ஈமானுல் காமில் அல்லது பூரண விசுவாசம்

ஆசிரியர்: பூஅலி செய்யிது அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு ஷாதுலி,
மேலப்பாளையம்.

## முன்னுரை

## அல்லாஹ்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம் நஹ்மதுஹு வனுசல்லி அலா முஹம்மதி ரஸூலிஹில் கறீம் வகாதமன்னபிய்யீன்.

அகில உலகையும் படைத்து வளர்மை செய்யும் கருணாகரனான அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உண்டாவதாக!

கருணையும் சாந்தியும் காருண்ய மகான், தீர்க்கதரிசிகளின் சபாநாயகர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்கள் பந்துக்கள் மீதும் அவர்களை பின் தொடர்ந்த நட்பாளர்கள் மீதும் மன்பதைகள் அடங்கல் மீதும் உண்டாவதாக. ஆமீன்.

அல்லாஹ் என்னும் பரமாத்மாவின் மீது பாவமன்னிப்பை ஆதரவு வைத்த அஷ்ஷெய்கு பூஅலி ஷாஹ் மதார் ஆரிபுபில்லாஹ்வின் புதல்வன் பூஅலி செய்யிது அப்துல் காதிர் ஷாதுலி வல் காதிரி வன்நக்ஷபந்தி கூறுகிறான்: பூதவர்க்கம் என்னும் மானிட வர்க்கத்தாரும், மறைந்த ஆவியென்னும் (ஜின்) தேவ வர்க்கத்தாரும், தன்னை பிரம்மம் என்றறிந்து ஒழுகி, தானென்ற பிரம்மத்தில் ஐக்கியமுற்று, சர்வமும் பிரம்ம மயம் என்று பணியாற்றவே அல்லாது சிருஷ்டிக்கவில்லை என்ற திருக்குர்ஆன் வேத வாக்கியப்படியும் மார்க்கத்தின் துவக்கம் அல்லாஹ்வை அறிதலென்னும் அறிவாத்மாவாய் விளங்கும் மகா வாக்கியப்படியும் (ஈமான்) பரிசுத்த விசுவாசப் பிரமாணம் கொள்ள சித்தம் கொண்டு நெடுங்கால தேட்டுறவின் பேரில் இந்நூலை எழுத ஆவல் கொண்டேன்.

இதில் ஈமான், இஸ்லாம், கலிமா இவைகளின் இரகசியார்த்தம் பூரணமாய் விளக்கப்பட்டிருப்பதால் "(ஈமானுல் காமில்)" பூரண விசுவாசம் என்று நாமம் சூட்டினேன். இதில் திருத்தம் கண்டால் அடியேன் மீது இரக்கம் கொண்டு தீர்க்க அறிவுடன் உள்ளமையை விளங்கி தருத்தும்படி உன்னிடத்தும் உன்னடியார்களிடத்தும் பொருந்தியதாக்கியருள். ஆமீன். இதுவே என் சம்மதம்.

முன்னுரை முற்றிற்று.

**1ஆவது அத்தியாயம்**

**ஈமான்**

(விசுவாசப் பிரமாணம் கொள்ளல்)

ஈமான் என்பது என்ன? ஈமான் என்ற பதத்திற்கு அறபி இலக்கியப்படி ஒரு வஸ்துவை உண்மையாக்கி வைத்தல் என்பது பொருள். இஸ்லாம் மார்க்கத்தின்படி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனித வர்க்கத்திற்கு எதைக் கொண்டு வந்தார்களோ இ அதை விசுவாசப் பிரமாணமாய் ஒப்புக் கொள்ளல் என்பது கருத்தாகும்.

**ஈமானின் ஆறு நிபந்தனைகள்**

1ஆவது அல்லாஹ் ஒருவன் உண்டென்று உறுதிப்பிரமாணம் கொள்ளல்

2ஆவது அவனுடைய அமரர்கள் (மலக்குகள்) உண்டென்று உறுதிப்பிரமாணம் கொள்ளல்

3ஆவது அவனுடைய வேதங்களும், ஆகமங்களும் உண்மையென்று உறுதிப்பிரமாணம் கொள்ளல்

4ஆவது அவனுடைய அடியார்களான மனித தூதர்கள் உண்டென்று உறுதிப்பிரமாணம் கொள்ளல்

5ஆவது இறுதி நியாயதீர்ப்பு நாள் உண்டென்று உறுதிப் பிரமாணம் கொள்ளல்

6ஆவது கற்பனைப்படி நன்மை, தீமை இவைகள் அல்லாஹ்வின்பால் உள்ளது என்று உறுதிப்பிரமாணம் கொள்ளல்.

ஆகவே இவையே தாம் இஸ்லாம் (ஷறஹில்) மார்க்கத்தில் கூறப்பட்ட பிராம்மான நிபந்தனைகளாகும். எந்த மனிதன் மார்க்க (ஷறகில்) விதியாக்கப் பெற்று இவ்வாறு நிபந்தனைகளையும், விசுவாசப் பிரமாணமாய் கொண்டு அதன் தத்துவார்த்தப்படி ஒழுகி நடக்கத்தலைப்படுகிறானோ அவனே உண்மை முஸ்லிமாவான். இது சம்பந்தமான விரிவுரை அரபியிலும்இ உருதுவிலும், தமிழிலும் மலிந்து கிடப்பதால் அறிவுடையார்க்கு எழுதத் தேவைப்படாதென்ற நோக்கத்தோடு எனது எழுதுகோலை நிறுத்திக் கொண்டேன். மேலேக் கூறப்பட்ட விசுவாசப் பிரமாணத்தோடு விளங்கும், மாண்புமிக்க மனித சமுதாயத்தை நோக்கி சர்வ வல்லமையுடைய அல்லாஹுத்தஆலா திருவுளமாயுள்ளான்: “என் சொல்லைக் கொண்டு (ஈமான்) விசுவாசப் பிரமாணம் கொண்டார்களே, உற்பத்திக்கு மூலகர்த்தாவான அல்லாஹ்வை கண்காட்சியாய் காணுவதைக் கொண்டு(ஈமான்) விசுவாசப் பிரமாணம் கொள்ளுங்கள்“.

கருணை வள்ளல் காருண்ய மகான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவாக்கியமானது மேலே கூறப்பட்ட வேத வாக்கியத்தின் சாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிரூபித்து விட்டது.



www.sufimanzil.org

அதாவது "சூரியனைப் போன்று மறைவின்றி சிருஷ்டி மூல கருணாகரனை, நீ பார்த்தாயானால், காரியமான சிருஷ்டி அனைத்தும் அல்லாஹ்வென சாட்சியம் கூறுவாயாக!"

எனவே இவ்வாக்கியத்தை ஆராயப் புகின், அகம், புறம் இவ்விரண்டிற்கும் வேறுபாட்டையுடைய உலகில் காணப்பட்டவை அடங்களும், அல்லாஹ் உடைய நாம தேய வருணனையின் ஆதாரங்களானபடியால், காண்பானும், காட்சிப் பொருளும் அல்லாஹ்வென்று (சிவன் என்று) சந்தேகமின்றி உலகம் காட்சியளிக்கிறபடியால் இக்காட்சியைக் கண்ணாறக் கண்டு, மனமாற சாட்சியம் கூறுதலே (ஈமான்) விசுவாசப் பிரமாணம் என விளங்குகிறது. ஆகவே பரமாத்மா தன்னில் தானே தன்மயமாய் தோன்றினான்.

உலகமனைத்தும் அல்லாஹ்வின் தோற்றமெனக் கண்டு அன்னியம், வேற்றுமை இவ்விரண்டையும் ஒழித்து எவன் (ஈமான்) விசுவாசப் பிரமாணம் கொளகிறானோ அவனே உத்தம புருஷனாகவும், உயரிய விசுவாசியாகவும் இருக்கிறான். அன்னியம் வேற்றுமை இவைகளை எவன் ஒழித்துக் கட்டினானோ அவனே பரிசுத்த அறிவாளன் என நாயகத் திருவாக்கியமும், சான்று பகர்கின்றது.

ஆகவே இஸ்லாமிய ஞான சூரியனும், ஞானப் பிரகாச நூல் ஆசிரியருமான **அஷ்ஷெய்கு பூஅலி ஆரிபுபில்லாஹ்** ஈமானின் ஆறு அம்சங்களுக்கு எழுதிய ரகசிய கருத்துரையாவது:

**1ஆவது ஆமந்துபில்லாஹி**

அல்லாஹ் என்னும் பரமாத்துமாவாகிய, என்னைக் கொண்டு யான் விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**2ஆவது வமலாயிகதிஹி**

யான் அரிஸ்ட்டானமாயிருந்துக் கொண்டு புறக் கருவிகளையும் உன் கருவிகளையும் அவனைக் கொண்டு வெளிப்படுத்துகிறேன் என்று விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**3ஆவது வகுத்பிஹி**

யான் அரிஸ்ட்டானமாயிருக்கிறேன் என்று அறிவிக்கும் தத்துவங்களே(திருக்குர்ஆன்) வேதமென்று விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**4ஆவது வருஸ்லிஹி**

யான் அறிவாகிய ஆத்துமாவென்ற அல்லாஹ்வாயிருப்பதால், யானென்ற அறிவே தூது என்று விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**5ஆவது வல் யௌமில் ஆகிரி**

இந்த தேகங்கள் மாறுதல் அடையும் காலம் யான் நித்தியன் என்ற நாளைக் கொண்டு விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**6ஆவது வல் கத்ரி கைரிஹி வஷற்றிஹி மினல்லாஹி தஆலா**

முத்தேகங்களில் பிரார்த்தவ உடலை எடுத்திருக்கும் காலத்தில் நல்வினை, தீவினை ஜீவன் செய்து வருவதால் அவைகளுக்குத் தக்கபடி உற்பத்தி நாசம் செய்வதற்கு காரணம் நானாயிருக்கிறேன் என்று விசுவாசப் பிரமாணம் கொண்டேன்.

**குறிப்பு:** எனவே இம்மகான் அருளிய ரகசியார்த்த கருத்தானது தாமென்ற உண்மையளவில் நோட்டமிடும் ஹக்காளிகளின் சொற்களெனும் பரிசுத்த விசுவாசமாயிருக்கிறது. இந்த ஆறு அம்சங்களையும் இவ்வுலகில் ஒவ்வொருவரும் உண்மை கொண்டே தீர வேண்டும். ஒரு காலத்தில் மானிடனாய்ப் பிறந்த மக்கள் அனைத்தும் இவ்வுண்மையைக் கண்டறியாமல் போகப் போகிறதில்லை. இனி ஈமானுடைய அம்சங்கள் ஆறையும் ஒவ்வொன்றாய் ஆராய்வோமாக.

**1ஆவது, அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது:-**

அல்லாஹ்வெனும் பரமாத்மாவாகிய என்னைக் கொண்டு நான் விசுவாசப்பிரமாணம் கொண்டேன். நானெனும் பிரம்மம் எத்தன்மையுடையதென்றால் சத்து, சித்து, ஆனந்தம், சமம், ஸ்த்திரம், சாட்சி, ஏகம், நித்தியம், பூரணமென்ற சிவத்தின் இலட்சணத்தையுடைய சொரூபமாயும், அசத்து, ஜடம், துக்கம், முக்காலமும் இல்லாத அசத்தும், சுயம் பிரகாசமில்லாத ஜடமும், ஆனந்தமில்லாத துக்கமும் அநித்திய ஜெகத்தின் இலட்சணத்தையுடைய சொரூபமாயும் இருப்பதால், எந்த மனிதன் அநித்திய ஜெகத்தின் இலட்சணமாய் வஞ்சகமான பஞ்சகோஷங்களென்னும் தேகத்தை நீக்கி வெளிப்படுவானோ அவனேதானென்னும் பிரமமாயும், ரூஹுல் குத்ஸ் என்ற கூடஸ்தனாயும் அல்லாஹ்வும் இருக்கிறான்.

மனிதர்களை அவர்களுடைய எல்லைக்குத் தக்கவாறு அமர்த்தியிருக்கிறேன். மேற்கூறிய லட்சியார்த்தப்படி விளங்களென்ற ஆத்மஸ்வரூப பிரம்ம அம்சமாகியதை அப்துல் கறீம் ஜீலி ஆண்டவர்கள் இன்ஸான் காமில் கிரந்தத்தில் வேதவாக்கியமான குல்ஹுவல்லாஹு அஹத் வியாக்கியானத்தில் கூறியுள்ளார்கள். சத்து, சித்து, ஆனந்தம், சமம், ஸ்த்திரம், சாட்சியென்ற இன்சானாகிய மனிதனே அல்லாஹ். யேக நித்தியின் பூரணம் என்ற அல்லாஹ்வாகிய மனிதனே எப்போதும் சகல நாட்டத்திலும் சிருஷ்டிகள் யாவற்றாலும் நாடப்பெற்றவன். அவன் ஒருவரையும் பெறவுமில்லை. அவன் ஒருவனால் பெறப்பெற்றவனுமில்லை. அவனுக்கு நிகர் ஒருவனுமில்லை என்று முஹம்மதே நீர் கூறுவீராக! இஸ்லாமிய ஞானசூரியன் அஷ்ஷெய்கு பூஅலி ஆரிபுபில்லாஹ் குல்ஹுவல்லாஹு அஹதுக்கு செய்த கருத்துரை முஹம்மதே! நீ என்ற பரமார்த்துமா கடவுள். அது தனித்தது. அதுவே எங்கும் வியாபகமானது. அஃது ஒருவரை பெறவுமில்லை. அஃது ஒருவரால் பெறப்பெற்றுமில்லை. அதுக்கு நிகரானது ஒன்றுமில்லை.

மீளவும் அவர்கள் செய்த ரகசியார்த்தம், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி இவைகள் நீக்கியும், யான் நீங்கவே இல்லை. மேலும் நித்தியனாகவும் நிகரற்றவனாகவுமிருக்கிறேன். (ஹதீது குத்ஸி) இன் தெய்வீகத் தூண்டுதலால் மொழியப் பெற்ற நபிகள் வாக்கியமானது கூறா நின்றது. நித்திய ஆன்மாவான அல்லாஹ்வானவன் அவன் தானென்றும் இலட்சணத்தின் பேரில் அவன் தன் அளவிலே, அவன் தன்னைத் தொட்டும் அவன் தன்னிலே நின்றுமே, அவன் தன்னைக் கொண்டு வெளியானதை அவன்தானே பார்த்தான். நானென்றும் பிரம்மமாகிய மனிதனே! உன் தாத்தென்னும் உள்ளமையை அல்லாஹ்வின் உள்ளமை என்றும், உன் சிபாத்தென்னும் வருணனையை அல்லாஹ்வின் வருணனை என்றும், உன் தத்துவங்களை அல்லாஹ்வின் தத்துவங்களென்றும், உன் செயல்களை அல்லாஹ்வின் செயல்கள் என்றும் அல்லாஹ்விடம் பரம்சாற்றி அல்லாஹ்வாய் நில். இதுவே நானென்னும் பிரம்மநிலை.

(நபியே) நீ மண்ணை எறிந்தபோது அதை நீர் எறியவில்லை. அல்லாஹ்தான் எறிந்தான்.

என்று திருக்குர்ஆனின் வேதவாக்கியமானது கூறுகிறது: அல்லாஹ் தன்னை சிருஷ்டியென்றும் உங்களை தன்னாய் வெளிப்படுத்தி மேலும் அவன் செயலையும் உங்கள் செயல் தன்னாய் வெளிப்படுத்தினான். உண்மையில் கடவுளுக்கு அன்னியமாய் நினைத்து வரும் நீ என்ற சிருஷ்டி பொய்யல்லாது, மெய்யன்று. எதுபோலெனில், கண்ணாடியில் தோன்றும் ரூபமானது பார்ப்போனின் தோற்றமும் செயலுமல்லாது வேறில்லை. தோற்றமும் செயலும் பொய். பொய்யான சடத்தை நீக்கி சச்சிதானந்தமென்ற இலட்சணத்தை உடல், பொருள், ஆவியாக்கி அதீத நிலையில் நில். ஆகவே உன்னுள்ளமை அல்லாஹ்வின் உள்ளமை உனக்கு அன்னியமாய் விளங்கி வரும் தத்துவங்களை பாழ்படுத்தி அந்த தத்துவங்களை நீ என்ற பரமாத்துமாவுக்கு ஒப்புவித்து உன் உள்ளமையை அல்லாஹ்வின் உள்ளமையில் ஐக்கியப்படுத்தி ஐக்கியப்படுத்தினோம் என்ற போதமுமற்று நிராம்சமாய் நானென்னும் ரப்பாய் தரித்திரு. இதுவே விசுவாசப்பிரமாணத்தில் தானென்னும் பிரம்மமாய் விளங்கும் அதீத முடிவுநிலை. மற்றநிலை இதற்கீடாகாது. மேலும் விளங்கிக்கொள்ள அவாவுடையோன் ஞானப்பிரகாசமென்னும் நூலைப் பார்த்துக் கொள்ளவும். நான் நானாய் இருப்பதே நாட்டம்.

**மனித உள்ளமை**

ஏ மனிதனே! ஆதி முதல் உனது உள்ளமையளவில் நோட்டமிடுவது உன் கடமையாகும். கடமையைச் செய்து கடவுளாய் நில். ஆதியில் அஹதியத்தென்ற சத்துமாத்திரமான ஹக்காயிருந்தாய். அது தன்னை தோற்றுவிக்க நாட்டமுற்று தன்னில்தானே தனிமையாய் இருந்தபோது சிர்ரென்னும் இரகசியப் பொருளாய் குறிப்பில்லாமலிருந்தாய். இந்த எல்லையைக் கண்டறிய எந்த தீர்க்கதரிசியாலும் எத்தகைய மகோன்னத பெரியோனாலும் முடியாது. இதற்கே (கன்சுல் மக்பி) மறை புதையலென்னும் ஆதி இன்ஸானின் மூல பதுக்க நிலை என்று கூறப்படும். அல்லாஹ் தன்னைத்தானே தோற்றுவிக்க சிந்தித்தபோது வஹ்தத் என்ற அறிவாகாயமான நூரே முஹம்மதியாவாய் இருந்தான். இதுவே தோற்றத்தில் முதல் குறிப்பென்னும் தம்மைத் தாமாய் வழி காட்ட வந்த வஹ்தத்துல் வுஜூத் என்ற அறிவு தூதென்றும், (உம்முல் குர்ஆன்) வேதமறையென்றும், தீனுல் இஸ்லாமென்ற சத்திய

சன்மார்க்க மதமென்றும் கூறப்படும். அல்லாஹ் வாஹிதிய்யா என்ற மனுக்கோலமாய் தோன்றினான். அந்த கோலத்தையே ஆதமென்றும், ஹெளவாவென்றும், சிவனென்றும், சக்தி என்றும் சிதாகாயமென்றும், இரண்டாம் குறிப்பென்றும் கூறப்படும். மேல் கூறப்பெற்ற இம்மூன்று நிலையும் (கதீம்) ஆதி மூலமாக இருக்கும். இவை சிருஷ்டிக்கப்பட்டவை அல்ல. இதற்குப் பின் ஆலமுல் அர்வாஹ் என்ற ஆன்மா உலகானாய். பின் ஆலமுல் மிதாலென்ற மாதிரி உலகானாய். பின் ஆலமுல் அஜ்ஸாமென்ற ஜட உலகானாய். பின் ஆல முன்னாசூமென்னும் மண்ணுலகானாய். இந்த நான்கும் அநாதியில் நின்றும் தோன்றியதால் (ஜதீது) புதிய தோற்ற நிலையாயிருக்கும். இந்நான்கும் சிருஷ்டிக்கப்பட்டவை. ஆகவே முன்கூறிய மூன்று நிலையும் அதன்பின் கூறப்பட்ட அநாதியான நாலு எல்லையும் கூடி ஏழு ஆலமான கிரகங்களாயிருக்கும்.

**2ஆவது மலக்குகளைக் கொண்டு ஈமான் கொள்வது:**

மலக்குகள் அநேக பேர்களுண்டு. அவர்களடங்களும் அல்லாஹ்வுடைய படைப்புகள், அல்லாஹ்வின் ஏவலுக்கு மாறு செய்யார்கள், அவனுக்குப் பணிவிடையாளர்களாயிருக்கும். அவர்களில் அர்ஷை சுமந்தவர்களும் உண்டு. அவர்களின் அநேகர் மனிதர், மிருகம், பறவைகள் இவைகளின் ரூபத்தில் ரிஸ்கை அளிப்பது கொண்டு துஆ கேக்கும் மலக்குகள் நான்கு. அவர்களில் சிலர் நிலையாய் நிற்பார்கள். சிலர் சுஜூதில் கிடப்பார்கள். சிலர் நன்மை, தீமை இவைகளை எழுதுவார்கள். சிலர் மாலிகு, ரிழ்வான், சூறூதுகிறவர் சிலர் மழை பெய்ய செய்பவர். உயிர் வாங்குபவர், வஹி கொண்டு வருகிறவர், கேள்வி கணக்கு கேட்பவர், இப்படி அனேக மலக்குகள் உண்டு. இவர்களடங்கலும் இரண்டு வகையாய் இருப்பார்கள்.

1ஆவது மில்வுல் அ.்லா.

2ஆவது முதப்பிறுல் அம்று.

அவர்களில் மில்வுல் அ.்லாவாகிறது ஜிப்றயீல், மீகாயீல், இஸ்றாபீல், இஸ்ராயீல் இவர்களாயிருக்கும். மண்ணுடையது ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். அதன் நிறம் மஞ்சள். அதன் தானம் (பல்குத்தி). மண்ணீரல் ஆலம் நாசூத்துஇ நப்சு அம்மாறா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம். இமாம் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு மண்ணின் வீடு. அதற்கு வாசல் நாவு. அதனால் பேச்சை உண்டாக்கும். உவர்ப்பு துவர்ப்புகளை மண்ணீரல் குடிக்கும். மண்ணின் குணம் வறட்சி சுவை உவர்ப்பு.

தண்ணீருக்குடையவர் மீகாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். அதன் நிறம் சிகப்பு. தானம் கருப்பு ஈரல். ஆலம் மலகூத்து. நப்ஸு லவ்வாமா. நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இமாம் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தண்ணீரின் வீடு. அதற்கு வாசல் கண். அதனால் பார்வையை உண்டாக்கும். உப்பு, புளிப்பை கருப்பு ஈரல் குடிக்கும். தண்ணீரின் குணம் குளிர்ச்சி. சுவை இனிப்பு.

காற்றுக்குடையவர் இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம். அதன் நிறம் பச்சை. தானம் நுரையீரல். ஆலம் ஜபரூத். நப்ஸ் முல்ஹிமா. நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இமாம் உதுமான் ரழியல்லாஹு அன்ஹு. காற்றின் வீடு. அதற்கு வாசல் நாசி. அதனால் வாசமுண்டாகும். (உறப்பு) எரிப்பை நுரையீரல் குடிக்கும். காற்றின் குணம் சதுப்பு. சுவை புளிப்பு.

நெருப்புக்குடையவர் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். அதன் நிறம் கருப்பு. தானம் பித்து. ஆலம் லாஹூத்து. நப்ஸ் முத்மயின்னா. நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவாகள் இமாம் அலி ரழியல்லாஹு அன்ஹு நெருப்பின் வீடு. அதற்கு வாசல் செவி. அதனால் கேள்வியுண்டாகும். கசப்பை பித்து குடிக்கும். நெருப்பின் குணம் சூடு. சுவை கசப்பு.

ஆகாயாத்துக்குடையவர் அசாசீல் அதன் நிறம் நீலம். தானம் தாமரைக்காய். ஆலம் மலகூத்து. (விலாயத்து) முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். அதனுடைய இடம் வாசல் கேசாதி. பாதம் முழுவதும் உடல் பூராவும் உணர்ச்சி உண்டாக்கும். ரூஹுக்கும் தாமரைக் காய்க்கும் தொடர்பு உண்டாகும். இனிப்பை தாமரை குடிக்கும். தாமரைக்காய் தான் இருதய கமலம். இதை சனவ்பர் என்றும் கல்பு மஜாஸி என்றும் சொல்லப்படும். யாம் என்பது அதனுடைய வீடானது. தாமரைக்காய் அதற்கு வெளிவாயில். ஆகாயமாகவும், ஆகாயத்தின் நிறம் நீலமாகவும் அதற்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எஜமானாகவும் இருக்கிறார்கள். மற்ற புலன்களெல்லாம் அதற்கு ஊழியர்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அது திரேக முழுமைக்கும் பாதுஷாவாயிருந்து இராஜாங்கம் நடத்துகின்றன. அல்லாஹுத்தஆலாவை அறிவதே அதன் யதார்த்த குணமாகும். மனிதரடைய மேனியிலிருக்கும் (நிஃமத்தில்) நற்பாக்கியத்தில் பாரதூரமானது ஐய்யறிவு. அதில் முகர்தல் என்னும் நிஃமத்தால் வாசமும், நாற்றமும் இந்த இரண்டையும் எற்றிக் கொள்வதால் அந்த நிஃமத்துக்கு ஷுக்ரு உண்டாக வேண்டி சுப்ஹு இரண்டு ரக்அத்தாகும். சுப்ஹு ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொழுதார்கள். சுவை என்கிற நிஃமத்தால் இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு இந்த நான்கையும் எத்திக் கொள்வதால் லுஹரு நான்கு ரக்அத்தாகும். லுஹர் இப்றாஹீம் நபி அவர்கள் தொழுதார்கள். தொட்டறிதல் என்னும் நிஃமத்தால் மெல்லினம், வல்லினம், உஷ்ணம், சீதளம் என்கிற நான்கு நிஃமத்தை எத்திக் கொள்கிறதினால் அசரு நான்கு ரக்அத்தாகும். அசரு சுலைமான் நபி அவர்கள் தொழுதார்கள். பார்த்தறிதல் என்கிற நிஃமத்தால் முன்னால், வலதால், இடதால் உள்ளதை எத்திக்கொள்கிற மூன்று நிஃமத்துக்காக மஃரிபு மூன்று ரக்அத்தாகும். மஃரிபு ஈஸா நபி அவர்கள் தொழுதார்கள். கேட்டறிதல் என்கிற நிஃமத்தால் முன்னாலே, பின்னாலே, வலதாலே, இடதாலே உள்ளதை எத்திக் கொள்கிற நிஃமத்துக்கு ஷுக்ரு செய்ய வேண்டி இஷா வக்தில் நான்கு ரக்அத்தாகும். இஷா மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொழுதார்கள். இவ்விதம் அல்லாஹுத்தஆலா அடியார்கள் பேரில் அவன் உன் கிருபை, ரஹ்மத்தால் ஷுக்றை தேடுகிறான்.

நி:.மத்துகளில் மிகுதம் ஜோடி ஜோடியாக இருப்பதால் குறிப்பு, உதாரணம்: கண், காது, கை, கால், உடலும், உயிரும், வானம், பூமி, இரவு, பகல், ஆண், பெண் ஆகியவைகள் ஜோடியாக உள்ளதால் சுன்னத்தான தொழுகை மிகுதத்தையும் இரண்டு இரண்டு ரக்அத்தாக ஆக்கப்பட்டது.

வித்தை ஒற்றைப்படையாக்கினதும், அதை இரவில் கடைசி தொழுகையாகவும், ஏவப்பட்டதெல்லாம் ஓர்மைபடுத்துதல் கொண்டும், ஒன்றுபடுத்துதலென்னும் அவனை ஒடுக்கமாக்கிக் கொள்வதற்காகத்தான். மேலும் எண்ணம், உதிப்பால் உதயமாய் ஓதலாகிய முவ்வறிவைக் கொண்டு வித்ருத் தொழுகை மூன்று ரக்அத்தானது என்று அறிந்துக் கொள்வீர்களாகவும்.

மேலே சொல்லிய ஐந்து பேரும் மில்வுல் அ:.லா. உன் கருமக்காரர்கள் என்று சொல்லப்படும். ஒரு மனிதனுக்கு வெளிகருமக்காரர்கள் முன்னூற்றி அறுபது பேர்களுண்டு. இவர்கள் தான் முதப்பிருல் அம்ரு என்று சொல்லப்படும். யாம் நாடியதை அவர்கள் முடித்து தருவதால் மலக்கென அர்த்தம் கொள்ளப்படும். ஆகக்கூடிய மலக்கு முன்னூற்றி அறுபத்தைந்து.

"நப்ஸு அடங்களும் அதன்மீது காவலாளி இல்லாமல் ஒவ்வொரு நப்ஸு அடங்களும் அதன்பேரில் அதை பேணிக் காக்கிற அல்லாஹுத்தஆலா உண்டாயிருந்தே ஒழியவில்லை" என்பது திருக்குர்ஆனின் கூற்று.

நீ உணர்ந்து பார் அப்போது தெரியும் அவனுடைய சிர்ரு. உலகமென்று பேர் கொண்டு வந்த எல்லா வஸ்த்துக்களும் அல்லாஹ் தன்னிடத்தால் நின்றுமே வெளியானதாயிருக்குமென்று முஹம்மதே நீர் இன்ஸான் யாவர்க்கும் சம்மத அறிவாய் இருதயத்தில் பற்றும்பொருட்டு அறிவியும் என்பதாயிருக்கும். திருக்குர்ஆனில் சொல்லியிருக்கிற கருத்தின் பொருளை கண்ணுற்று கல்பால் உணர்ந்து காணும் பட்சத்தில் விண்ணுக்கும் மண்ணுக்கும் (வஹ்தத்துல் வுஜூது) தானாயிருக்குமென்கிறதை அவன் தெரிந்து கொள்வதில் யாதொரு தடையும் கிடையாது.

**3ஆவது வேதங்களைக் கொணடு ஈமான் கொள்வது:**

**வேதங்கள்:**

வேதங்கள் நான்கு உள்ளன. மூஸா அலைஹிஸ்ஸலாம் தௌறாத்து, அபுறானி பாஷையிலும், தாவூத் அலைஹிஸ்ஸலாம் சபூர், யூனானி பாஷையிலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இன்ஜீல், சுர்யானி பாஷையிலும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புர்கான், அரபி பாஷையிலும் இறக்கப்பட்டது.

சு:.புகள்:

ஆதம் அலைஹிஸ்ஸலாம் பத்து சு:.பும் சீது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஐம்பது சு:.பும், நூஹு அலைஹிஸ்ஸலாம் முப்பது சு:.பும், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பத்து

சு:ஃபும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தௌறாத்து வேதத்துடன் பத்து சு:ஃபும் ஆகவே சு:ஃபுகள் மொத்தம் நூற்றி பத்தும் அவரவர்கள் பேசிய பாஷையைக் கொண்டு இறக்கப்பட்டது.

இவை முழுவதும் அல்லாஹ்வுடைய திருவசனமென்று உண்மை கொள்வது, கலாமென்பது வார்த்தை, வார்த்தைக்குடையவர் ஜிப்றீல் அவருக்கு தானம் (பல்குத்தி) மண்ணீரல் அதற்கு வாசல் நாவு. நாவால் மொழிவதெல்லாம் அல்லாஹ் உடைய கலாமாயிருக்கும். கலாமாகிறது சித்ரதுல் முன்தஹா என்னும் ஜீவ விருட்சத்தின் உள்ளிருக்கும் எகீன் என்னும் உண்மை விருட்சத்தின் இலை என்கிற எழுத்து முப்பத்திரண்டு. அந்த எழுத்துக்கள் சரீரமாய் இருப்பதால் இதிலிருந்து வரும் வார்த்தை வேதம் என்று சொல்லப்படும்.

**4ஆவது ரஸூல்மார்களைக் கொண்டு ஈமான் கொள்வது:**

ரசூலென்பது (தூது) எனக் கூறப்படும். அல்லாஹ் (ஆதம்) இல்லாமையில் நின்றும், உணர்ச்சி என்கிற நுக்தாவாகி அமா என்று ஏழு சிபத்தாகியிருந்து அலிபில் நின்றும், லாமாய் வளைந்து, மீமாய் சுழித்து, அலிபாய் நீண்டு வித்தாய் விளைந்து கர்ப்பத்தில் புகுந்து (நுத்பாவாய்) முஹம்மதாய் ரசூலாய் வந்தான். அல்லாஹ் திருவுளமாயிருக்கிறான்.

"அவனுக்கும் அவனுடைய ரசூலுக்கும் இடையில் வித்தியாசமில்லை" ஹதீது குத்சியில் திருவுளமாயிருக்கிறான். "மனிதனை மண்ணில் நின்றும், மண்ணைத் தண்ணீரில் நின்றும், தண்ணீரை நெருப்பில் நின்றும், நெருப்பைக் காற்றில் நின்றும், காற்றை ரூஹில் நின்றும், ரூஹை காபுக்கிடையிலும் நூனுக்கிடையிலும் நின்று படைத்தான். ஆகவே ரசூலென்பது முஹம்மது. அதற்கு எழுத்து நான்கு. அந்த நான்கு எழுத்தின் கோலத்தில் மனிதன் பிறந்து இருப்பதால், இவர்களும் அல்லாஹ்வின் தூது எனச் சொல்லப்படும். கோலமாவது தலை மீமைப் போலும், இரண்டு கைகள் ஹேயைப் போலும் வயிறு இரண்டாவது மீமைப் போலும் இரண்டு கால்கள் தாலைப் போலுமாயிருக்கும். காபிர் முஸ்லிம்களிலொருவரையும் இந்தக் கோலத்தின் பேரில் அல்லாஹுத்தஆலா அதாபு (வேதனை) செய்ய மாட்டான். கின்சீர் முதலான சூறத்தின்பேரில் மாற்றப்பட்டு வேதனை செய்யப்படும்.

**5ஆவது கியாம நாளைக் கொண்டு ஈமான் கொள்வது:**

கியாமமென்பது நிலைபாடு. ஆகிரம் என்பது ஒடுக்கம். யௌமு என்பது ஆறு மர்த்தபா கூடியது. அதாவது சரீரம், அதற்கு நிலைபாடு பூமி. பூமி என்பது மண். அதேர்டு கூடியது தண்ணீர் காற்று, நெருப்பு, ஆகாயம். ஆகாயம் என்பது ஏழு வானம். வானம் ஏழும் சிபத்து. ஏழும் கேள்வி, பார்வை, பேச்சு, அறிவு, உயிர், நாட்டம், தத்துவம். இந்த ஏழும் கூடி உண்டானவன் மனிதன். இந்த மனிதனை கியாமமென்று சொல்லப்படும். இவனுடைய முடிவை ஆகிறமென்று கூறப்படும். இறைவன் திருவுளமாயிருக்கிறான்:

"யௌமதுபத்திலுல் அற்லு"

இதன் பொருள்: “பூமியை பதல் செய்யும் நாள்“. கருத்தாவது ஆறு மர்தபாவை பூமியில் நின்றும் வேறாக்கும் நாள் என்பதாகும். ஆகவே ஒருவன் மரணித்தால் அவனுக்கு அது கியாமம் என்று சொல்லப்படும். கியாமத்துக்கு அடையாளம் சூர் ஊதப்படும். இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் சூர் குழலைப் பிடித்து அர்ஷின் தாழே மண்டியிட்டு இருந்துக் கொண்டு வலது காதை அர்ஷின் பக்கம் உயர்த்திக் கொண்டு நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தி எட்டு (4448) கவருள்ள சூர் குழலை வாயில் வைத்துக் கொண்டு ஆண்டவன் உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அல்லாஹ்தஆலா திருவுளமானான்: “இன்னறப்பக லபில் மிர்ஷாத்“ இதன் பொருள் - “அல்லாஹ் ரிஸ்கு செல்லும் வாயலில் தரிபட்டு இருக்கிறான்“. ரிஸ்காகிறது சிருஷ்டியில் ஹயாத் இருக்கிறது அன்ன பானாதி அடங்களிலும் அதற்குடையவன் பெயரை எழுதப்பட்டிருக்கிறது. மேலும் ரிஸ்குக்கு ஒரு கிரகம், முஅக்கலாகவுமிருக்கிறது. ஒருவனுக்கு அளிக்கப்பட்ட அன்ன பானாதி எவ்வளவோ அவ்வளவு முடிவானவுடன் இஸ்றாபீல் அறிந்து கொள்கிறார். அவர் தரிபட்டு இருக்கும் நுரையீரலில் இருந்து கொண்டு சூறெனும் தம்மை ஊத நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தெட்டு நரம்புகளின் துவாரத்துள் புகுந்து அத்துடன் பித்திலிருக்கும் இஸ்றாயீல் கலந்து திரேக சூடு குறைந்து அதனால் ஆத்மா சக்தியும் குறைந்து குளிர்ந்து கல்கு என்ற ஆலம் அழியும். பூமி, வானம், இதற்கிடையிலிருக்கும் பாலம் இந்த ஸ்தூலம். இதை விட்டு கடப்பது சிறாத்துல் முஸ்தகீம் என்னும் பாலத்தை கடப்பதாகும். திரேக நரகென்னும் வேதனையை விட்டு ரூஹு வெளியாகும் மகிழ்ச்சி சுவர்க்கமாகும். பித்தின் குணத்தாலுண்டாகும் தொண்டை கசப்பை ஆகிறத்து கசப்பு எனக் கூறப்படும். மூச்சடிப்பென்னும் காற்று அகோரத்தாலுண்டாகும். வறட்சியை தாகமென்றும், சேத்தும அடப்பை சூரியன் வல்லய பிரமாணம் உயர்த்தப்பட்டது என்றும், மௌத்துடைய (ஹாலில்) வேலையில் மூளை உருகி விந்து வெளியாவதை சூரியனுடைய சுடரால் மூளை உருகி வடியுதென்றும், கை கால்கள் சாட்சி சொல்வதென்பது மௌத்துடைய (ஹாலில்) நேரத்தில் இவன் ஜீவனோடு செய்த தொழிலை விட்டும் சோர்ந்து போவதென்றும், மீசான் திராசு இரு கண் விழி என்றும், ஹௌலுல் கௌதர் என்பது (ஊஸ்தாத்) குரு மகானுடைய (பியாலா) கோப்பை என்றும், மகாமுன் மஹ்மூதாவென்பது இரு புருவத்திடையென்றும், லிவாவுல் ஹம்து கொடி என்பது மனம் ஓடிப் பறப்பதென்றும், (ஷெய்கு) குரு மகான்கள் சொன்ன உபதேசம் என்றும், அல்லாஹ் உடைய சிம்மாசனம் ஹகீகத்துடைய தானம் என்றும் சொல்லப்படும்.

**6ஆவது மௌத்துக்குப் பின் எழுப்பி கேள்வி கணக்கைக் கொண்டு ஈமான் கொள்வது:**

அதாவது மனிதன் தாய் தந்தை இருவரின் இச்சையிலிருநது வந்ததினால் மௌத்து இச்சையுடன் வெளியாகும். இச்சையின் காரணமாய் விந்து வெளியாகி விடும். மற்ற பூதங்கள் மண் மண்ணோடும், தண்ணீர் தண்ணீரோடும், நெருப்பு நெருப்போடும், காற்று காற்றோடும், ஆகாயம் ஆகாயத்தோடும் கலந்து விடும். ஆகாயமடங்களும் ஏழு கிரகங்களாய் வகுக்கப்பட்டிருப்பதால் ஹயாத்து சூரியனிலும், அறிவு சந்திரனிலும், நாட்டம் முஸ்தரியிலும், தத்துவம் மிற்ரீகிலும், பேச்சு சுஹலிலும் ஒருங்கே கூடி விடுகிறது. ஒருவனுக்கு வயது நூற்றி இருபது. அதாவது சந்திரனுக்கு வயது பத்து. அதாரிக்கு வயது பதினேழு. சுகறாவுக்கு வயது

இருபது. சூரியனுக்கு வயது ஆறு. மிற்ரீகுக்கு வயது ஏழு. முஸ்தரிக்கு வயது பதினாறு. சுஹலுக்கு வயது பத்தொன்பது. ராகுக்கு வயது பதினெட்டு. கேதுக்கு வயது ஏழு. ஆக வயது நூற்றி இருபது. இவைகள் ராசி 12 கொண்டு சம்பந்தப்பட்டிருப்பதால் சில காலங்களில் இதில் சொல்லப்பட்ட கிரகங்கள் எத்தனை சம்பந்தப்பட்டதோ, அதற்குள்ள இலக்கப்படியுள்ள வயதுக்கு இருப்பான். இலக்கனங்கள் சம்மந்தத்தை இதில் எழுதினால் நூல் விரிந்து விடுமென்று இத்துடன் நிறுத்திக் கொண்டேன். மௌத்தானவனுக்கு சென்ற வயது போக மீதி வயதை கிரகங்கள் கொடுக்க வேண்டியிருப்பதால், மீதி வயதை அரூப அம்சத்தில் நடத்தி முடிப்பான். அரூப அம்சத்தில் மீதி வயது முடிவானதும் வானில் நின்றும் மழை பொழியும். மல் சொல்லிய கிரகங்கள் அடங்களும் கலந்து பூமியில் விழும்போது அதன் சத்துக்கள் பலதாய் முளைத்து வெளிபடுகிறது. இதற்காகவே ஆகாயத்தில் ஒரு மனிதனுக்கு ஒரு நட்சத்திரம் இருக்கிறது. மௌத்துடைய (ஹாலில்) நிலையில் வந்து வெளியாகும்போது, அந்த நட்சத்திரமும் கீழே விழுந்து விடுகிறது.

மனிதனுக்கு உஜ்புதன்பு என்கிற முள்ளு மனிதன் இறந்தபின்னும் அழியாமலிருக்கிறது. உஜ்பு என்கிற முள் சரீரத்தை இழுப்பதற்கும், றமீம் என்கிற முள் உயிரை இழுப்பதற்கும் வித்தாயிருக்கிறது. காந்தம் இரும்பை இழுப்பதுபோல் உடல், உயிர் இவை இரண்டின் சக்திகளை இழுத்து மழையால் முளைத்து, தாவரப்பூண்டுகள் வெளியாகி காயஇ அல்லது பழம் அல்லது இலையாயிருக்கிறது. இவன் முன் எந்த கிரகங்களுக்கு சம்பந்தப்பட்டு மீதி வயதை கொடுக்கிறதற்கு இருந்ததோ அந்த வயதை அனுபவிப்பதற்காக அந்த கிரகத்துக்குச் சம்மந்தமான ராட்சத ரூபங்களை எடுத்து மீதி வயதின் பயனை அனுபவிக்கிறான்.

**7ஆவது நன்மை, தீமைகளைக் கொண்டு ஈமான் கொள்வது:**

அதாவது நன்மை, தீமை அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொருத்ததாயிருக்கிறது. அல்லாஹ்வின் நாட்டமுடையான் என்னும் நாமம் வெளியாகும் ஸ்தலமாகிய இருதயத்தில் உதயமாகும் உதிப்பே இறாதத்தென்னும் நாட்டமாகும். அந்த நாட்டமென்னும் உதிப்பே சகல காரியத்தையும் செய்ய மனதை தூண்டுகிறது. அத்தகைய தூண்டுதலுக்கு (அக்லுல்) அவ்வல் முதல் விவேகாம்சம் அல்லது முதல் அறிவு என்று கூறப்படும். முதல் விவேகாம்சம் எந்த காரியங்களைச் செய்வதற்கும், தத்துவங்களை உசுப்புகின்றன. தத்துவங்கள் உறுப்புகளை முன்னிறுத்துகின்றன. உறுப்புகள் முதல் நினைத்த காரியத்தை செய்து முடிக்கின்றன. நன்மை, தீமை என்பது செயலின் நிமித்தம் ஏற்படும் பெயர் சொல்லாகும். செய்வோனும் செயலும் ஒன்றல்லாது வேறில்லை. செய்யத் தூண்டும் முதல் அறிவும் அவனே. ஆகவே இவை மூன்று உண்மை ரகசியத்தை கவனிக்கும்போது அல்லாஹ்வே அல்லாமல் வேறில்லாமையால் வேத திருமறையில் இறைவன் திருவுளமானான்:

“வமா தஷாவூன இல்லா அன்யஷா அல்லாஹு றப்புல் ஆலமீன்“

இதன் பொருள்: "சிருஷ்டிகர்த்தா நாடினாலன்றி சிருஷ்டிகள் நாடமாட்டார்கள்". கருத்தாவது நாடியோனும், நாட்டமும், நாட்டப்பட்டவையும் நீ என்னும் பிரம்மத்தை தவிர வேறில்லை என்று ஈமான் விசுவாசப் பிரமாணம் கொள்ளல்.

**2ஆவது அத்தியாயம்**

**இஸ்லாம்**

இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்ற பதத்திற்கு வழிப்படல், சாந்தி, நிவர்த்தி, முகத்தி எனப் பொருள்படும். அதாவது சகல ஜீவர்களும் எந்த மனிதன் கையை விட்டும், நாவை விட்டும் விடுதலை அடைந்தானோ அம்மனிதனே (முஸ்லிம்) நிவர்த்தி பெற்றோன், சாந்தியுடையோன் எனக் கூறப்படும்.

இஸ்லாத்தின் ஐந்து அம்சங்கள்

1ஆவது கலிமா ஷஹாதத்து, 2ஆவது தொழுகை, 3ஆவது ஜகாத்து, 4ஆவது நோன்பு, 5ஆவது ஹஜ்ஜு.

**முஸ்லிம் என்பார் யார்?**

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: "முஸ்லிம் என்பான், சாந்தியுடையோன் யாரெனில், சாந்தியுடையோனின் கையை விட்டும், நாவை விட்டும் ஏனைய மனிதர்கள் சாந்தி அடைந்தார்களானால் அவனே முஸ்லிம், சாந்தியாளன்" என்று கூறினார்கள். ஆகவே நாம் யோசிக்கக் கடமைப்பட்டுள்ளோம். யாம் முஸ்லிம், சாந்தியாளனெக் கூறும்போது நம்முடைய கையை விட்டும், நாவை விட்டும் மானிட வர்க்கமும், ஜீவ வர்க்கமும் சாந்தி அடைந்துவிட்டதா என்று சிந்தனை செய்து பார். அவர்கள் சாந்தி அடையவில்லையானால் நீவிர் பொய் சொன்னவறாவீர்கள். ஏ சாந்தியாளா! சர்வ ஜீவராசிகளையும் உன் கையை விட்டும், நாவை விட்டும் நிவர்த்தித்துக் கொள். சாந்தியாளனாக விளங்குவாய். மேலும் நீ சிருஷ்டி என்ற கட்டை அவிழ்த்து நிவர்த்தி பெற்றுக் கொள். அதாவது விடுதலை அடைந்து கொள். சிருஷ்டிப் பொருள்களை திரையை நீக்கி பிரம்மமாய்ப் பார். நீ என்ற பிரம்ம ஏவலுக்கு வழிப்பட்டு நித்தியமான விலகலைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். காட்சியிலும்இ நோட்டத்திலும் ஒரே கவர்ச்சியாயிருந்து அந்தகார திரையை அகற்றி (நூறானிய்யா) பிரகாசத் திரையளவில் ஒடுங்கி, அதையும் உன்னை நீ ஆராய்வது கொண்டு கிழித்தெறிந்து நீ என்னும் உண்மையையும் அல்லாஹ்வின் உள்ளமையில் அழித்து நிவர்த்தித்து விடுதலைப் பெற்றுக் கொள். அதாவது முக்திப் பெற்றுக் கொள். மேல்கூறிய நிலையைப் பெற்றோன் சாந்தியாளன். முஸ்லிம்.

**1ஆவது சாட்சி நிரூப மூல மொழி**

சாட்சி நிரூபித்தல் என்பது என்ன? ஷஹாதத்து என்பது என்ன? ஷஹாதத் என்பது கண்ணால் கண்டு நிரூபித்தல் எனப் பொருள்படும். ஆகவே கண்ணால் காணாததை ருசுப்பித்தல் பொய் சாட்சியாம். உலகில் காட்சி அளிப்பவை அடங்களும் அல்லாஹ்வின் நாமத்தையும், வர்ணிப்பையும், செயலையும் வெளிப்படுத்தும் கூட ஸ்தலமாய் இருப்பதால் காண்பானும் காட்சியும் நிரூபித்தல் யாவும் அல்லாஹ்வாயிற்று. இதுவே ஹக்கைக் கண்ணால் கண்டு நிரூபிக்கும் சாட்சியம். இந்நிலையே அல்லாஹ்வை கண்ணால் பார்க்கும் கண்காட்சி. அந்த கண்காட்சியைக் கண்டு சாட்சியம் சொல்வதே ஷஹாதத்தாம். "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்" கலிமா ஷஹாதத்தின் பொருள் காட்சிகளில் யாதொரு வஸ்துவும் அல்லாஹ் அல்லாமல் வேறில்லாமையால் யானும் அல்லாஹ் தானென பிரசன்னமான ஞானகுருவை அல்லாஹ்வின் கண் கொண்டு என் உண்மையை அல்லாஹ்வாய் கண்டு ஷுஹூது சாட்சியம் கூறுகிறேன். "வ அஷ்ஹது அன்ன முஹம்மதற் றசூலுல்லாஹ்". அல்லாஹ் தன்னுள்ளே தன்னில் நின்றும் தன்னைக் கொண்டு தன்னளவிலே முஹம்மதெனும் திருநாமத்தால் தோற்றமானான். என்றும் பிரசன்னமான ஞானகுருவை அல்லாஹ்வின் கண் கொண்டு என்னுள்ளமையை முஹம்மதாய் கண்டு (ஷாஹித்) சாட்சியம் கூறுகிறேன்.

"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி"

யானென்னும் சுத்த பிரம்மமே கடவுள். யானென்னும் சுத்த பிரம்மத்தின் அறிவே தூது. கருத்தாவது யான் அல்லாஹ்வுக்கும் முஹம்மதுக்கும் வேறில்லாமையால் யான் யானாகவே இருக்கிறேன். "லா" என்றால் இல்லை என்று அர்த்தம். கருத்தாவது ஆலமென்னும் படைப்பு அல்லாஹ்வைத் தவிர வேறில்லை. இதையே "லா" எனக் கூறப்படும். "இலாஹ்" என்றால் அல்லாஹ் என்று அர்த்தம். கருத்தாவது அல்லாஹ் தன்னில் தானே தன் மயமாய் இருக்கையில் தானே வெளியாக வேண்டுமென்று நாடவும், தன்னில் தானே வெளியான கோலத்தை "இலாஹ்" எனக் கூறப்படும். சுருங்கக் கூறுமிடத்து உண்டானவை அடங்கலும்இ உண்டாகப் போகின்றவை அடங்கலும் அல்லாஹ்தானாகவே இருக்கிறான். இத்தகைய யதார்த்த வாதத்தையே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவாக்கியமும் களங்கமற நிரூபிக்கிறது.

"கலக்கல்லாஹு ஆதம அலாசூறதிஹி" அல்லாஹ் ஆதமை தன் கோலத்தின் மீது சிருஷ்டித்தான். அஹதியத்தென்னும் தற்சொரூப பிரம்மமானது தன்னில் தானே தன்மயமாய் இருந்தது. தன்னைத் தானே தோன்றச் செய்ய நாடிய போது வஹ்தத் முஹம்மதென்னும் பிரகாச ரூபமாய் தோன்றிற்று. அந்த பிரகாச ரூபமானது வாஹிதிய்யத்தென்னும் ஜெக ரூபமாய் தோன்றிற்று. இதுவே "இலாஹ்" -நாம ரூப பிரபஞ்ச கடவுள் தோற்றமெனச் சொல்லப்படும்.

கருத்தாவது "லாயிலாஹ" நாமரூப பிரபஞ்சமில்லை. "இல்லல்லாஹ்" நிஸ்வரூபமான அல்லாஹ் ஒருவனுண்டு. அவன்தானே நாம ரூப பிரபஞ்சமாய் (இஸ்பலிக்க) தோன்ற நாடியபோது இஸ்க்கென்னும் மோக கனலுண்டாகி அந்தக் கனல் தோல், சதை, எலும்பு, மூளை, ரத்தம் முதலியவற்றுள் கலந்து ஒன்றாய்த் திரண்ட மணியை இரு புருவத்தினிடையே

இருக்கும் "றமீம்" என்ற எலும்பானது காந்தம் சோடிப்பது போல் மணியை இழுத்தவுடன் "குன்" தோற்றுவாய் எனப் பேர் பெற்றதை லாயிலாஹ எனக் கூறப்படும் சிரோண்மானிக்கமான சேகரமாகிய மணி அங்கிருந்து புறப்பட்டு முதுகு தண்டின் வழியே இறங்கி கர்ப்பத்துள் பாய்ந்து முத்து போலாடிய சுக்கிலத்தை சுரோநிதம் கூடி "பயகூன்" தோன்றியதெனப் பெயர் பெற்று தனித்து நின்றதை "இல்லல்லாஹ்" எனக் கூறப்படும். சுக்கிலம்இ சுரோ நிதம் இதிலிலருந்து உறுப்புகள் வெளியாவதை "முஹம்மது" எனக் கூறப்படும். சொரூபம் பூர்த்தியாக உண்டாகி வெளி நோக்கத் திரும்புதலை "ரசூல்"(தூது) எனக் கூறப்படும். பிறந்த குழந்தையை "அல்லாஹ்" எனக் கூறப்படும். ஆகவே யான் தானே அல்லாஹ்வாய் தோன்றியதை ஹக்கின் கண் கொண்டு பார்த்து யானே பரிசுத்த பிரம்மமெனக் கண்டு "ஷஹாதத்து" சாட்சியம் கூறுகிறேன். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**2ஆவது சலாத்து தொழுகை பிரார்த்தனை**

சலாத்தென்றால் என்ன? சலாத்தென்னும் பதத்திற்கு அர்த்தம் நெருப்பில் புகுதல். அல்லாஹ் என்னும் பெரும் நெருப்பில் சிருஷ்டியென்னும் தடியை புகுத்தி சிருஷ்டியிலுள்ள மையை அகற்றி பிரம்மமாய் நிற்பதாம். இன்ஸான் காமிலென்னும் கிரந்தத்தில் தொழுகைப் பிரார்த்தனையாவது, நாமதேய வன்னிப்பு அடங்களைக் கொண்டு வன்னிப்பு பெறுவதே "வாஹிதிய்யா" ஜெக ரூபத்தின் அகமியத்தை நிலை நாட்டி வைப்பதனளவில் சைக்கினையாயிருக்குமென்று ஷெய்கு அப்துல் கரீம் ஜீலி கூறியுள்ளாார்கள். "அஸ்ஸலாத்து அய் நிஸ்யானு மாஸிவல்லாஹ்" அல்லாஹ் அல்லாத எல்லாவற்றையும் மறந்து தானெனும் பிரம்மத்தையறிந்து, அவன் தானாய் விளங்குவதே தொழுகை. தொழுகைப் பிரார்த்தனையில் புக நீ நாடினால் அல்லாஹ் அல்லாத எல்லாவற்றையும் மறந்து சூனியமாக்கி நிஸ்களங்க பிரம்மமாய் நிற்பதாம்.

"அஸ்ஸலாதுன்னிய்யா"

தொழுகை பிரார்த்தனையின் நாட்டம் யான் அல்லாஹ்வாய் இருக்கிறேன். என்னை யான் வணங்குகிறேன். தொழுகை என்பது தனக்கு அன்னியமாய் ஒன்றையும் பாராமலிருப்பதே தொழுகை பிரார்த்தனை. ஏ! ஜோதி பிரகாசமான மனிதனே நீ என விளங்கும் நிஸ்களங்க பிரம்மத்தைத் தவிர உலகையும் அதைச் சார்ந்தவற்றையும், மறு உலகையும் அதைச் சார்ந்தவற்றையும் அறிவும் உடம்பையும் அதைச் சார்ந்தவற்றையும், அன்னியத்தையும் உன் இருதயத்தை விட்டும் அகற்றி பரிசுத்தமாய் கலப்பற்று அல்லாஹ்வாய் நிற்றலே மாறாதியானமென்றும், நீங்கா சிவயோகமென்றும், கதானுஸ்டானமென்றும் கூறப்படும்.

**3ஆவது சகாத் சுத்திகரித்தல்**

சகாத் என்றால் என்ன?



www.sufimanzil.org

சகாத் என்ற பதத்திற்கு சுத்திகரித்தல் என்பது அர்த்தம். "அஸ்ஸகாத்து அய்தஸ்கியதுன்னப்ஸ்" மனதை சுத்திகரித்தல். அதாவது பரிசுத்த பிரம்மமாகிய அறிவைத் தவிர தத்துவம் யாவும் யானல்ல என்று நீக்குவது.

சகாத் சுத்தப்படுத்துவதாம். ஏ பரிசுத்த மனிதனே உன்னைச் சிருஷ்டி என்று நினைத்து வந்த நினைப்பான ஊத்தையை நீக்கி அதற்குப் பகரமாய் நீ பிரம்மம் என்ற நினைப்பை உறுதிபடுத்துவதைக் கொண்டு மனதை சுத்திகரித்துக் கொள். மேலும் ஈயாமை என்ற மனோபாவத்தை விட்டும் மனதை சுத்தம் செய்துக் கொள். ஈயாமையானது மனதை அசுத்தப்படுத்தும் ஊத்தையாயிருக்கும். இது மனதில் தரிபட்டு இருக்கும்வரை தொழுகை வணக்கமில்லை. இருதயம் சுத்திகரித்தல் பெற்ற ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகாத் என்னும் மன சுத்திகரித்தல் எவனுக்கு இல்லையோ அவனுக்குத் தொழுகை வணக்கமில்லை" எனத் திருவுளமானார்கள். எனவே தத்துவம் ஈயாமை இவைகளை விட்டு மனதை அகற்றி அவைகளுக்குப் பகரமாய் பரிசுத்த அறிவை நிரப்பி ஹக்காய் நில். இதுவே சகாத் எனப்படும். ஹக் அல்ஹம்துலில்லாஹ்.

**4ஆவது சவ்ம் உபவாசம்**

சவ்ம் என்றால் என்ன?

சவ்ம் என்ற பதத்திற்கு தடுத்தல், உபவாசித்தல் எனவும், பற்றுதலை விடுதலெனவும் பொருள்படும். "அஸ்ஸௌமு தரகுத்த அல்லுக்" யான் ஆண்டானின் அடிமை. முஹம்மதின் சமூகம் என்ற பண்பை விடுவதே சவ்ம் உபவாசித்தல், தடுத்தல் எனக் கூறப்படும். மனிதப் பண்பும், சமூகப் பண்பும் இடையில் கொழுவிய தொத்து வியாதியாகும். "அஸ்ஸௌமு லீவ அனா அஸ்ஸிவு பிஹி". ஆகவே உபவாசித்தலென்னும் வணக்கம் எனக்குடையது. வன்னிப்பே நானென்னும் பிரம்மனாய் விளங்குவதே கூலி என்று இறைவன் கூறியுள்ளான். அடிமை சமூகம் என்ற வடுக்கள் சிந்தனையில் வரஒட்டாமல் தடுத்து அல்லாஹ் அளவில் சேர்க்கப்பட்ட சத்து, சித்து, ஆனந்தமென்ற வன்னிப்பை, உடல், பொருள், ஆவியாய் அமைத்துக் கொள்வதாம். எந்த அளவிற்கு மனிதப் பண்பு, சமூகப் பண்பு என்ற கொள்கையை விட்டு விடுவானோ அந்த அளவிற்கு அல்லாஹ்வாய் ஸ்பலித்து விடுவான். இதற்கொப்ப முதுமொழியாளர்களும் அதுவானால் அதுவாவார். அதுவே சொல்லும் என்று சொல்லியுள்ளார்கள். ஆகவே கடவுள் வன்னிப்பை பெற்று அல்லாஹ்வாய் நில்.

**5ஆவது ஹஜ்ஜு புனிதயாத்திரை**

ஹஜ்ஜென்ற பதத்திற்கு புண்ணிய யாத்திரை செய்தல்இ நாட்டம் வைத்தல் எனப் பொருள்படும்.

"அல்ஹஜ்ஜுன்னஹுல் மினல்மிஆதி இல் மப்தஉ"

ஆலம் இன்ஸான் முதல் அஹதிய்யத்து வரைக்கும் உஜூது மஹ்லாகக் காண்பது ஹஜ்ஜு.

யான் எனதென்ற கொள்கையை விட்டும் யாத்திரை போய் நாட்டம் வைத்தல், அல்லாஹ்வாய் தோன்றுவதாம். அதாவது மனித உலக தோற்ற முதல் அஹதிய்யத் அல்லாஹ்வின் உள்ளமை, மீட்சிவரை கலப்பற்ற பிரம்மமாய் தோத்திரவு செய்தல் அல்லது அல்லாஹ்வின் உள்ளமை மீட்சி முதல் மனித உலக தோற்றம் வரை கலப்பற்ற அல்லாஹ்வாய் தோத்திரவு செய்தல். கருத்தாவது மனித பூண்டு தோற்ற முதற்கொண்டு மீட்சியுறும் அல்லாஹ் வரை கலப்பற்ற பிரம்மமாய் பார்த்தல். இதுவே ஏக்கமுற்று ஏகாந்தமாய் இருக்கும் நாட்டமென்னும் ஹஜ்ஜாம். ஆகவே உற்பத்திக்கு தமுன் அல்லாஹ் (சிர்ரு) ரகசியார்த்தமாய் இருந்தான். பின் (நூறு) ஜோதி பிரகாசமானான். அந்த ஜோதி பிரகாசத்தினின்றும் நெருப்புண்டாயிற்று. நெருப்பில் நின்றும் காற்றுண்டாயிற்று. காற்றில் நின்றும் தண்ணீர் உண்டாயிற்று. தண்ணீரில் நின்றும் மண் உண்டாயிற்று. மண்ணில் நின்றும் மனித உலகமும் அதைச் சார்ந்த சர்வமும் உண்டாயிற்று என்ற அதீத அறிவினால் அறிந்து அந்த அறிவின் நினைவான நாட்டமாய் இருப்பது இதற்கு உற்பத்தி முதல் மீட்சி வரை சிந்தித்தலென கூறப்படும். இதே சிந்தனையில் மனதைப் பூட்டி சதாய் சிவனாய் விளங்குவதே ஹஜ்ஜு கூறப்படும். யான் எனதென்பதை விட்டொழித்து அல்லாஹ்வின் உள்ளமையில் புனித யாத்திரை செய்பவனே அல்லாஹ்வின் உள்ளமையல்லாது நீ வேறில்லை, சர்வமும் பிரம்ம மயம் என்ற உண்மையிலேயே ஊறிக் கிடக்கிறது. எல்லா ஜீவர்களின் இம்சையை விலக்கி கடவுள் அம்முசியாய் நின்று கொள். நான் நானா இருப்பதே என் நாட்டம். ஹக்கு அல்ஹம்துலில்லாஹ்.

இந்த வேதாந்த நூலைப் படிக்கும் கவர்ச்சியாளர்களே! தாமென்னும் உண்மை ஹக்கானபடியால், ஹக்கென்னும் வாழ்வாய் நித்தியம் பெற்று வாழ்வீர்களாக. ஆமீன். ஹக்கனே உன்னில் தத்தம் நடப்பது யாவும் உன் சித்தம் சித்தம். ஆமீன். ஹக்கு அல்ஹம்துலில்லாஹ்.